Ontario

ONTARIO IMMIGRATION



Premier
Dalton McGuinty

ஒன்டாரியோவிற்கு உங்களை வரவேற்கிறோம்! நீங்கள் சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறீர்கள். வாழவேண்டிய இடம் ஒன்டாரியோவேதான், நீங்கள் இங்கு குடியேறி வெற்றி அடைவதற்கு தேவையான தகவல்களை பெறுவதற்கு மிகச்சிறந்த இடங்களில் ஒன்று இதுவே.

உலகிலேயே மிகப்பல வகைப்பட்ட இடங்களில் ஒன்று ஒன்டாரியோதான். எமது மக்கள் 130 க்கும் அதிகமான மொழிகளைப் பேசுவதோடு சுமார் 200 க்கும் அதிகமான நாடுகளில் இருந்து இங்கு வந்தவர்கள். கனடாவின் வேறு எந்த மாகாணத்தைப் பார்க்கிலும் ஒன்டாரியோவையே தங்கள் புதிய வசிப்பிடமாக தினமும் 300 க்கும் அதிகமான மக்கள் தெரிவு செய்கின்றனர்.

நீங்கள் எந்த நாட்டவராயினும் அப்பெரிய சமுதாயத்தின் பாகமாக வாழ முடிவது ஒன்டாரியோவின் சிறப்பம்சங்களில் ஒன்று. உண்மையில் எங்கள் மக்களே எங்கள் மிகப்பெரும் சொத்து, அவர்களின் மிகப்பெரும் சொத்துக்களில் ஒன்று அவர்கள் பல்வகைப்பட்டிருப்பதே. அதனால்த்தான் முழு உலகிலிருந்தும் மிகுந்த திறமையும் சாமர்த்தியமும் வாய்ந்தவர்களை தொடர்ந்தும் நாங்கள் கவர்ந்திழுக்க விரும்புகிறோம். ஏனெனில் எமது பல்வகைப்பட்டதன்மை எங்கள் பொருளாதாரத்தையும் எங்கள் செழுமையையும் எங்கள் மாகாணத்தையும் வலுப்படுத்துகிறது.

வாழ்க்கையின் எல்லாப் பாதைகளில் இருந்தும் வரும் புதிய கனேடியர்கள் எமது பொருளாதாரத்திற்கும் எமது சமுதாயத்திற்கும் பாரிய பங்களிப்புக்களை செய்திருக்கிறார்கள். எமது மாகாணத்திற்கு புதிதாக வருவோர் வெற்றியடையும்போது ஒன்டாரியோ வெற்றியடைகிறது.

எனவே எமது அரசாங்கம் நீங்கள் இங்கு குடியேறி வெற்றியடைய உங்களுடனும் உங்கள் குடும்பத்துடனும் சேர்ந்து உழைக்கும். அதிதிறமான பாடசாலைகளில் உங்கள் பிள்ளைகளுக்கு மிகநல்ல ஆரம்பம் இருக்குமாறு நாம் பார்த்துக்கொள்வோம். உங்கள் குடும்பத்திற்கு உயர்தரமான மருத்துவநல சேவைக்கான வழியிருக்குமாறும் நாங்கள் பார்த்துக்கொள்வோம். நீங்கள் இங்கு விரைவாக குடியேறவும் வேலை தேடிக்கொள்ளவும் உதவும் பொருட்டு, பல்வேறு மொழி மற்றும் குடியேற்றத் திட்டங்களை வழங்குவதற்கு நாங்கள் கனேடிய அரசாங்கத்துடன் சேர்ந்து உழைப்போம்.

இந்த இணையதள வலைப்பக்கத்தில், நீங்கள் வசிப்பதற்கான இடங்கள், வேலை, படிப்பு, ஒரு தொழிற்கலையைக் கற்றுக்கொள்தல் அல்லது உங்களுடைய தொழிற்கலை அல்லது உத்தியோகம் செய்தல் மற்றும் ஒன்டாரியோவில் ஒரு புதிய வியாபாரத்தை ஆரம்பித்தல் ஆகியவற்றைப் பற்றி கண்டடையலாம்.

அத்தோடு ஒன்டாரியோவில் வாழ்க்கை – எமது மக்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி, எங்கள் சரித்திரம், எங்கள் புவியியல் மற்றும் வானிலை மற்றும் ஒன்டாரியோவுக்கு விஜயம் செய்தல் ஆகியவை பற்றி மேலுமதிகத்தைக் கண்டடையலாம்.

முக்கியமான விண்ணப்பப் பத்திரங்களையும் இறக்கம் செய்யலாம். குடிவர விண்ணப்பம் செய்ய, சாரதி அனுமதிப்பத்திரம் பெற மற்றும் ஒன்டாரியோவில் உங்கள் புதிய வாழ்வைத் தொடங்க உங்களுக்குத் தேவையான பத்திரங்கள்.

உலகெங்குமிருந்து வரும் அனைத்து மக்களும் இருக்க வேண்டிய இடம் – ஒன்டாரியோவிற்கு உங்களை வரவேற்கிறோம்.

Visit Premier McGuinty's site
Back to OntarioImmigration.ca